# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 24/2022** **Date:01.12.2025**

**(PW1)- நடராஜன்**

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. இந்த வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் புதிய சா்வே வரைபடப்படி இருக்க வேண்டி கேட்டு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பட்டிகை சொத்து எனக்குரியது என்று விளம்புகை செய்ய எந்த பரிகாரமும் கேட்கவில்ரைலயென்றால் சரிதான். வழக்குபட்டிகை சொத்து எனக்குதான் பாத்தியப்பட்டது என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல. நான் சான்றிட்ட நகல் தான் தாக்கல் செய்துள்ளனே் என்றாலும் அசல் தாக்கல் செய்யாதற்கான காரணங்களை கூறவில்லையென்றாலுமம் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்துகளில் தென்னை மரங்கள் இல்லையென்றால் சரியல்ல.

2. இந்த வழக்கு பட்டிகை சொத்தை பொறுத்து 3,4 பிரதிவாதிகள் பொறுத்து நான் எந்த பரிகாரமும் கோரவில்லையென்றாலும் எனவே அவா்கள் வழக்கிற்கு தேவையில்லாத கட்சி காரா்கள் என்றாலும் சரியல்ல, அவா்களும் 4 எல்கைகளில் உள்ள சொத்துகளின் உரிமையாளா்கள் ஆவா். நான் வழக்கு சொத்தில் எந்த பக்க எல்கையை நிா்ணயம் செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டு கூறவில்லையென்றால் சரியல்ல. வடக்கு பக்க எல்கையில் 3,4 பிரதிவாதிகள் சொத்து இல்லையென்பதால் அவா்கள் தேவையற்ற கட்சி காரா்கள் என்றாலும் அவா்களை கஷ்டப்படுத்த வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3. வழக்கு பட்டிகை சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 11.803 சென்ட் ஆகும். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் வழக்கு பட்டிகை சொத்தின் மொத்த விஸ்தீரணம் 11.304 சென்ட் என்றாலும் சரிதான், வழக்கு பட்டிகை சொத்தின் மொத்த விஸ்தீரணம் 11.304 சென்ட் ஆகும். வழக்கு பட்டிகை சொத்தை எனது அப்பாவிடமிருந்து கிரயம் பெற்றுள்ள விவரத்தை வாசாஆ. 1

ஆவணத்தில் குறிப்பிடவில்லையென்றல் மேற்படி சொத்தானது எனது சித்தப்பாவிடமிருந்து கிரயம் பெற்ற சொத்தாகும்.

4. வழக்கு பட்டிகை சொத்து மேடான பகுதி என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எவ்வளவு மேடான பகுதி என்றால் 4 முதல் 5 அடி மேடாக இருக்கும். வழக்கு பட்டிகை சொத்தின் வடக்கு எல்கையில் அடித்தளம் அமைக்க எப்போது வேலையை துவங்கினேன் என்றால் சரியாக நினைவில்லை, 2022 ல் துவங்கினேன். எவ்வளவு அடி தூரத்திற்கு அடித்தளம் அமைத்தேன் என்றால் சுமார் 7 அடி தூரத்திற்கு அடித்தளம் அமைத்தேன். அடித்தளம் அமைக்கும் போது எடுக்கப்பட்ட மணலை எனது நிலத்தில் போட்டேனா பிரதிவாதிகளின் நிலத்தில் போட்டேனா என்றால் எனது நிலத்தில் போட்டேன்.

5. நான் கிரயம் பெறுவதற்கு முன்பே பிரதிவாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்தின் வடக்கு பக்கம் எல்கை கற்கள் உள்ளது என்றால் சரிதான், 3 எல்கை கற்கள் இருந்தது, தற்போது ஒரு எல்கை கல் இல்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 09.12.2025 தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

( ஒப்பம் )
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல்